සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

තෙවන වාර පරීක්ෂණය
**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026**
Third Term Test

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade } 13 | විෂයය / பாடம் / Subject } **கிறிஸ்தவம்** | පත්‍රය / வினாத்தாள் / Paper } **II** | පැය / மணித்தியாலம் / Hours } **03** |

பகுதி I இல் இருந்து இருவினாக்களையும், பகுதி II இல் இருந்து 3 வினாக்களையும் தெரிவு செய்து 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பகுதி I

01.

i. செப்புவாஜிந்த் பிரதியின்படி நற்செய்தி என்பதற்கு பயன்படுத்தப்படும் கிரேக்க சொல் யாது?
(1x2=2புள்ளிகள்)

ii. சமநோக்கு நற்செய்தி தொடர்பான பல்வேறு கருத்துகள் 4 தருக.
(1x4=4புள்ளிகள்)

iii. புனித மத்தேயு யூத கிறிஸ்தவர்களுக்காக தமது நற்செய்தியை முன்வைப்பதோடு அதில் காணப்படுகின்ற யூத இலட்சணங்கள் ஆறு எழுதுக.
(1x6=6புள்ளிகள்)

iv. புனித பவுலடியாரின் வாழ்விலிருந்து இன்றைய கிறிஸ்தவர்கள் பெற்றுக்கொள்ளும் முன்மாதிரிகைகள் 4ஐ விளக்குக.
(2x4=8புள்ளிகள்)

02.

i. 1505 இல் காலித்துறைமுகத்தில் வந்திறங்கிய போர்த்துக்கேய தளபதி யார்?
(1x2=2புள்ளிகள்)

ii. அருட்தந்தை கிறிஸ்டோபர் பொன்ஜின் அடிகளார் இலங்கையின் கல்வி தொடர்பாக முன்வைத்த 4 பிரேரனைகள் தருக.
(1x4=4புள்ளிகள்)

iii. போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னரே இந்நாட்டில் கிறிஸ்தவர்கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் 6 தருக.
(1x6=6புள்ளிகள்)

iv. இலங்கையின் போர்த்துக்கேய மறைத்தூதுப் பணியிலிருந்து பொதுநிலையினர் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகைகள் 4ஐ எழுதி விளக்குக.
(2x4=8புள்ளிகள்)

03.

i. கொன்ஸ்தாந்திநோபிள் திருச்சங்கத்தில் பேதகங்களின் கருத்துக்களை விலக்கிவிட்டு மறையுண்மைகளை உறுதிப்படுத்திய திருச்சபைத் தந்தையர் இருவரை குறிப்பிடுக.

(2புள்ளிகள்)

ii. தொடக்ககால திருச்சபையில் புற இனத்தவருக்கு நற்செய்தி போதிக்கப்பட்டபோது நடைபெற்ற நிகழ்வுகள் 2 தருக.

(4புள்ளிகள்)

iii. மிலான் அரச சாசனம் மூலம் கிறிஸ்தவர்கள் பெற்ற நன்மைகள் 3 தருக.

(6புள்ளிகள்)

iv. கலாபனைக் காலத்தில் வாழ்ந்த தொடக்க திருச்சபையினரின் வாழ்விலிருந்து இன்றைய உமது வாழ்க்கைக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் 4ஐ எழுதி விளக்குக.

(8புள்ளிகள்)

## பகுதி II

04.

i. திருமுழுக்கின் மூலம் கிடைக்கின்ற மூவித பொறுப்புகளையும் சரியாக நிறைவேற்றும் முறை 5 காரணிகளினூடாக விளக்குக.

ii. திருச்சபைத் தந்தையர்களின் படிப்பினைகளையும், தூய்மையான வாழ்வையும் முன்மாதிரிகையாகக் கொண்டு இன்றைய திருச்சபையின் வளர்ச்சிக்கு பாடசாலை மாணவன் என்ற வகையில் எம்மால் செய்யக்கூடியவற்றை 5 காரணிகள் தந்து விளக்குக. (திருவிவிலியத்திக் துணையுடன் முன்வைக்குக)

05.

i. இறைவாக்கினர் எசாயா 11:1-9 திருவிவிலிய மேற்கோளுக்கேற்ப அமைதியின் அரசின் நன்மைகள் 5ஐ சுருக்கமாக விளக்குக.

ii. மத்தேயு நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மலைபொழிவில் திருச்சபையின் போதனை தொடர்பாக திருச்சபைத் தலைவர்கள் ஆற்ற வேண்டிய பொறுப்புகள் 5ஐ எழுதி விளக்குக.

06.

i. 16ம் நூற்றாண்டில் திருச்சபையில் ஏற்பட்ட மறுமலர்ச்சி மிக விரைவாக பரவுவதற்கு வழிவகுத்த் காரணிகள் 5ஐ குறிப்பிட்டு விளக்குக.

ii. பாடசாலை மாணவன் என்ற வகையில் மனித மாண்பை வளர்க்கக் கூடிய சந்தர்ப்பங்கள் 5ஐ திருவிவிலியத்தின் துணையுடன் விளக்குக.

07.

i. திருச்சபைத் தந்தையர்கள் திருச்சபைக்கு ஆற்றிய பங்களிப்பை 5 காரணிகளினூடாக உதாரணங்கள் தந்து விளக்குக.

ii. திருத்தந்தை 13ம் லியோ அவர்களின் பணிவாழ்விலிருந்து இன்றைய அருட்பணியாளர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகைகள் 5ஐ விளக்குக.

08.

i. தகுந்த முறையில் நற்கருணையைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக வளர்த்துக்கொள்ள வேண்டிய செயல்கள் 5ஐ எழுதி விளக்குக.

ii. பவுலடியாரின் மறைதூதுப் பயண வாழ்வின் மூலம் இன்றைய கிறிஸ்தவர்கள் பெற்றுக்கொள்ளும் வழிகாட்டல்கள் 5ஐ விளக்குக.